[1973 பிப்ரவரி 7

மேட்டூர் ரசாயன தொழிற்சாலை கழிவுநீர்

* 48 வினு—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தாலுகா, பி.என். பட்டி, விரக்கல்புதூர் ஆகிய கிராமங்களில் பல விவசாய கிணறுகள், மேட்டூரில் உள்ள ரசாயன தொழிற்சாலையின் கழிவுநீர் காரணமாக கெட்டிருப்பதும், இதனுல் பல விவசாயிகள் பல வருடங்களாக பாதிக்கப்பட்டிருப்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(இ) அரசாங்கத்திற்கு இது சம்பந்தமாக முறையீடு வந்திருக்கின்றனவா ?

(உ) அப்படி வந்திருந்தால் அது சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) பாதிக்கப்பட்ட 46 கிணறுகளிலிருந்து மாதிரி தண்ணீர் எடுக்கப்பட்டு முதனிலை பகுப்பாய்வு நடத்தப்பட்டது. அவைகளில் நான்கு கிணறுகளிலுள்ள நீர் விவசாய உபயோகத்திற்கு ஏற்றதாக இருப்பதாக கண்டு பிடிக்கப்பட்டது. மற்றவை உப்புக் கலந்தவை. மீதமுள்ள 42 கிணறுகளின் நீர் அதிக அளவு உப்பு கலந்துள்ள தன்மையினுல் விவசாய உபயோகத்திற்கு பயனற்றதாக கண்டு பிடிக்கப்பட்டது. கழிவுப் பொருளை விடுவிப்பதால் ஏறத்தாழ 354 கிணறுகள் அசுத்தமாக்கப்படலாமென்று ஐயுறுவதாக அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. விரிவான பகுப்பாய்வுக்காக, எல்லா கிணறுகளிலிருந்தும் மாதிரிகளை சேகரிப்பதற்காக தனியான பணியாளர் தொகுதியினை நியமிக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. பகுப்பாய்வு முடிந்தவுடன் தண்ணீர் கெடுதலின் தன்மையும் எவ்வாறு தண்ணீர் உபயோகத்திற்கு ஏற்றதாக செய்ய இயலும் என்பது பற்றியும் ஆலோசிக்கப்படும்.

திரு. எம். சுரேந்திரன் : இந்தப் பிரச்னை பல ஆண்டுகளாக இருந்து கொண்டிருக்கிறது. இதில் தண்ணீர் கெட்ட காரணத்தால் ஏராளமான நிலம் விவசாயம் செய்வதற்கு லாயக்கற்றதாகப்

1973 பிப்ரவரி 7]

போயிருக்கிறது. அவர்கள் ஒருவருக்கும் நஷ்டயீடு அளிப்பதற்கோ அல்லது மற்றக் காரியங்கள் செய்வதற்கோ நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இந்த ஆய்வு எவ்வளவு நாட்களுக்குள் முடியும்? அந்த ஆய்வு முடிவதற்கு முன்னால் அதற்கான பரிகாரத்தைத் தேடுவதற்கான வழிவகைகள் பற்றி அரசாங்கம் யோசிக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இப்படி பல்வேறுவிதமான தொழிற்சாலைகள் ஏற்பட்டு வருவதால் பலயிடங்களில் நீர் நிலைகளின் தரம் மாறுவதால் பொது மக்களுக்குக் கெடுதலாக முடிகிறது என்ற எண்ணம் அரசுக்கு ஏற்பட்டு அண்மையில் நீர்நிலைகள் கெடாமல் இருப்பதற்கு பொதுவாக எந்தவிதமான நடவடிக்கைகள் எடுப்பது என்பதைப் பற்றி நல்ல ஆலோசனைகளை அரசுக்கு வழங்குவதற்காக ஒரு பொறியாளர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சுறுசுறுப்பாக இதுபற்றி ஆலோசித்து வழங்கும் கருத்துக்களை ஆராய்ந்து தக்க நடவடிக்கைகள் எடுக்க அரசு முயற்சிக்கும்.

திரு. கே. ஏ. வகாப் : இப்படி நீர்நிலைகள், காற்று இவற்றை ஆராய்வதற்கு மத்திய அரசிலிருந்து ஒரு குழு வந்ததாக அண்மையில் அறிவிக்கப்பட்டது பத்திரிகைகளில். அவர்கள் ஏதாவது அறிக்கை அனுப்பியிருக்கிறார்களா? அதன்மூலம் நம் அரசாங்கம் ஏதாவது நடவடிக்கைகள் எடுக்க அல்லது ஆலோசனை கூற எண்ணம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மத்திய அரசிலிருந்து எந்தக் குழுவும் வந்ததாக எனக்கு விவரம் இல்லை. ஆனால் தமிழக அரசு இந்த ஆராய்ச்சி பற்றி இயன்ற அளவிற்கு முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறது.

திரு. கே. என். குமாரசாமி : இந்தத் தொழிற்சாலைகளின் கழிவுப் பொருள்களை எங்கே கொண்டுபோய் விடவேண்டுமென்று தொழிற்சாலை கட்டுவதற்கு முன்னாலே நிபுணர் குழுவினால் ஆராய்ச்சி செய்யப்பட்டதா? அப்படி நிபுணர் குழுவினால் ஆராய்ச்சி செய்யப்பட்டு—இந்த இடங்களில் அப்படிப்பட்ட தொழிற்சாலைகள் அமைப்பதன்மூலம் அப்பிரதேசம் முழுதும் கெட்டுக் கிடக்கிறதே—முன்யோசனையோடு நடவடிக்கை எடுக்கப் பட்டதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்தத் தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கிய காலத்தில் இவைகளால் இவ்வளவு பாதகம் ஏற்படும் என்ற எண்ணம் அப்போதிருந்த அரசுக்கு இருந்ததாக அல்லது அவர்களுக்கு அப்படித் தெரிவிக்கப்பட்டதாக நான் அறியவில்லை. அந்தக் காலச் சூழ்நிலையில் தொழிற்சாலைகள் வந்தால்போதும் என்ற ஆர்வத்தில் அவற்றைத் தொடங்கியிருப்பார்கள். ஆனால் ஏற்படுகிற விளைவுகளை இனிதான் சமாளித்தாக வேண்டும்.

திரு. எம். சுரேந்திரன் : இப்படிப் பல கிணறுகள் கெட்டுவிட்டிருக்கின்றன என்று தெரிந்ததற்குப் பின்னால் கெட்டுவிட்ட நிலங்களுக்கு நஷ்டயீடாக அரசாங்கத்திலிருந்து ஏதாவது உதவி செய்யப்பட்டதா ? அல்லது அந்தத் தொழிற்சாலை முதலாளிகளால் ஏதாவது உதவி செய்யப்பட்டதா ? அதற்கு என்ன வழிவகை செய்யப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சரியான பரிகாரம் என்ன என்பதை காணவேண்டிய கட்டத்தில் நாம் இருக்கிறோம். உறுப்பினர் அவர்கள், அதில் அக்கறை உள்ளவர்கள், சரியான பரிகாரம் இன்னதுதான் என்று சொன்னால் அல்லது ஒருவேளை தொழிற்சாலையை மூடுவதுதான் சரியான பரிகாரம் என்று சொன்னால் அதையும் அரசாங்கம் பரிசீலித்துப் பதில் சொல்லும்.

Wages for employees in Coir industry

* 49 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) whether the Government have revised the wages for the employees of the Coir Industry; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) விவர அறிக்கை @ ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

@ 491–495-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.